செ.வெ.எண்.18 நாள் 06.09.2017

## பத்திரிக்கைச் செய்தி

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், கரூர் மாவட்டம்

மாண்புமிகு மறைந்த முன்னாள் முதல்வர் பாரத ரத்னா புரட்சித்தலைவர், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடுதல் தொடர்பாக, மாரத்தான் ஓட்டம் பந்தயம் வருகின்ற 16.09.2017 அன்று பள்ளி மற்றும் கல்லூரி மாணவ/மாணவியர்களுக்கு (வயது வரம்பு கிடையாது) ஆண்களுக்கு 6.கீ.மீ.தூரமும், மற்றும் பெண்களுக்கு 4கீ.மீ. தூரமும், நடைபெற உள்ளது.

எனவே இதுகுறித்த செய்தியினை கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கு.கோவிந்தராஜ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில் , மாரத்தான் ஓட்டம் **ஆண்களுக்கு** கரூர் திருவள்ளுவர் மைதானத்தில் (கிழக்கு வாயில்) ஆரம்பித்து உழவர் சந்தை, லைட்ஹவுஸ் (புதிய பாலம்), திருமாநிலையூர், சுங்ககேட், தெரசா கார்னர், குளந்தானூர், ராயனூர், பசுபதிபாளையம் ( மேம்பாலம்), ஐந்து ரோடு, அண்ணா வளைவு , மார்க்கெட், சர்ச் கார்னர், திண்ணப்பா தியோட்டர், பஸ்டாப் ரவுண்டனா, ஸ்டேட் பாங்க், வழியாக திருவள்ளுவர் மைதானம் மேற்கு வாயில் முடிவடைகிறது.

**பெண்களுக்கு** திருவள்ளுவர் மைதானம் கிழக்கு கேட் வழியாக ஆரம்பித்து ஜவஹர்பஜார் (தைலா சில்க்), தபால் நிலையம், மே தியோட்டர், சர்ச்கார்னர், திண்ணப்பா தியேட்டர், சின்ன கொங்கு மண்டபம், சேலம் பைபாஸ், திருக்காம்புலியூர் இடதுபுறமாக திரும்பி சென்னை சில்க்ஸ், கண்ணன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர், அரிஸ்டோ ரவுண்டானா, ஸ்டேட்பாங்க் வழியாக வந்து திருவள்ளுவர் மைதானம் மேற்கு நுழைவாயில் முடிவடைகிறது.

மேற்காணும் மாரத்தான் ஓட்டத்தில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் சீருடைகள் வழங்கப்பட உள்ளது. எனவே கலந்து கொள்ளும் மாணவ/ மாணவியர்கள் 09.09.2017 ஆம் தேதிக்குள் பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டியும், தங்களின் முன்பதிவினை மாவட்ட விளையாட்டு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டியும் கேட்டுக் கொள் ளப்படுகிறது.

எனவே, கரூர் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பள்ளி/கல்லூரிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களை கல்லூரி முதல்வர்கள் தலைமையாசிரியர்கள் இந்த மாரத்தான் ஓட்டம் நடைபெறும் இடத்திற்கு மாணவ/மாணவியர்களை அதிக அளவில் பங்குபெறச் செய்ய அனுப்பி வைக்க வேண்டுமென கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர், திரு கு. கோவிந்தராஜ்,இ.ஆ.ப., கேட்டுக் கொள்கிறார்.

**வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**